

குறள் நெறி காப்போம்!





பகுத்தறிவு போற்றுவோம்!!

# மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றம்

## TAMIL WRITERS FOUNDATION - MAHARASHTRA (RETD)

மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றம்

25ஆம் ஆண்டு

2000 - 2025

வெள்ளி விழா

## வெள்ளிவிழா ஆண்டு மாநாட்டு மலர்

மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றம்
Tamil Writers Foundation,Maharashtra(Regd.)
G-05,Udyog Vihar Industrial Estate, Near Vithalwadi Railway Station,Ulhasnagar-421003,Thane Dist., Maharashtra
Contact: 7875848340, 9820046075 Email: mahatwf@gmail.com

பாவரசு வதிலை பிரதாபன்
(மன்றத் தலைவர்)
கல்வியாளர் அமலா ஸ்டேன்லி
(பொதுச் செயலாளர்)

மலர் வெளியீட்டுக் குழுத் தலைவர்
முனைவர் மு. பாலசுப்பிரமணியன்
(மன்ற ஆலோசகர், பேராசிரியர்
ஸ்ரீபாரதி கலை அறிவியல் மகளிர்
கல்லூரி புதுக்கோட்டை)

மலர்க்குழுப் பொறுப்பாளர்கள்
திரு. சேதுராமன் சாத்தப்பன்
(புரவலர்)
கவிஞர் அரியக்குடி மெய்யப்பன்
(புரவலர்)
பாவலர் முகவை திருநாதன்
(ஆலோசகர்)
கவிஞர் பிரவீனா சேகர்
(கருத்துரைஞர்)
திரு. டி.என். முத்துகிருஷ்ணன்
(ஆலோசகர்)
தமிழ்நாடு
முனைவர் மகாசுந்தர்
(கருத்துரைஞர்)
முனைவர் ச. பிரியா
(தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர்)
முனைவர் இரா. பன்னிருகை வடிவேலன்
(கருத்துரைஞர்)
முனைவர் நா. தனலெட்சுமி
(கருத்துரைஞர்)
முனைவர் சு. சாந்தி
(கருத்துரைஞர்)
முனைவர் யு.துர்காதேவி
(கருத்துரைஞர்)
விளம்பரம்
வழக்கறிஞர் க. கணேசன்
(சட்ட ஆலோசகர்)
திரு. கு. மாரியப்பன்
ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்)
திரு. ஞானம், மதுரை
(மக்கள் தொடர்பு - தமிழ்நாடு)
திரு. சேதுமணி அனந்தா
(மன்றக் கலைப்பிரிவு)
திரு. மகேந்திரன் அண்ணாமலை
(மன்றக் கலைப்பிரிவு)
மலர் வடிவமைப்பு மேற்பார்வை
கவிமாமணி இரஜகை நிலவன்
(துணைத் தலைவர்)
திரு. வே. சதானந்தன்
(நிருவாகக் குழுச் செயலாளர்)
திரு. வெங்கட் சுப்ரமணியன்
(நிருவாகக்குழுத் துணைப் பொருளாளர்)

# வெள்ளி விழா மாநாட்டு மலர்



## பாவரசு வதிலை பிரதாபன்

மாநாட்டு இயக்குநர் மற்றும்
தலைவர், மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றம்

## முகவுரை

அன்புடையீர் வணக்கம் !

உலக மாந்தரினம் போற்றும் உன்னத மொழியாம் தமிழ் என்றுரைத்து சிந்துகவிப் படைப்பாலே செந்தமிழின் தரமுயர் செவ்விதழ்கள் புன்னகைக்க தெள்ளுதமிழ் இலக்கியங்கள் தெவிட் தேனடையாய் வளமுடைத்து வரிசைகட்ட வகைக்கொன்றாய் சிறகடித் பறப்பதற்கு உறுதுணையாய் ஓராயிரம் அமைப்பிருந்தும் தமிழுக் மண்ணெமது தாயகமாய் இருந்தாலும் மராத்தியத்தில் எழிலார் அமைப்பாக அன்னையவள் அழகிற்கு அணிசெய்யும் நன்முத்தாய் வந்தது "மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றம்".

புத்தாயிரமாண்டாம் 2000இல் தோன்றி தென்னகத்துப் பண்பா செந்தமிழின் தொன்மையுமாய் சிறகடித்துத் தமிழ்வளர்த்து வெள்ளி ஆண்டினிலே வேரூன்றக் காத்திருக்கும் புலம்பெயர்ந்து வந்தோர்க் தமிழுணர்வு ஊட்டிட்டு படைப்பாளர் பலருக்கு பைந்தமிழ்ப் பாதையிட் சொற்பொழிவு, கவியரங்கம், கருத்தரங்கம் பட்டிமன்றம் ஆய்வரங் என்றேதான் அணிசெய்த அமைப்பான மன்றத்தின் பாங்கா நிகழ்வெல்லாம், அருமார்ந்த தமிழறிஞர் அள்ளியள்ளி மகிழத்தக்கன.

பெருந்தொற்றும் பேரிடியும் புறந்தள்ளப் பார்த்தாலும் பைந்தமிழ் பயணத்தில் தடையற்றுத் தொடர்ந்திட்ட தொண்ணூற்றி இரண் நிகழ்வுகளை இணையவழி நடத்தியதால் உலகத்தார் போற்றிட்டு புகழ்ந்தாரே என்றெண்ணிப் பேருவகைக் கொள்கின்றோம்.

சிந்தைமிகு தமிழிற்கு விந்தைமிகு நிகழ்வளித்து வருங்காலச் சந்ததி வளமார்ந்த தமிழுணர்வால் மகிழ்வோடு வாழ்வதற்கு மாணவர்க்கு பரிசுகளும் திறனார்ந்த பெரியோர்க்குத் தமிழாய்ந்த உளத்தோர்க்கு தரமுயர்த்தும் விருதளித்து இயல் இசை நாடகமாய் முத்தமிழின் சிறப்பிற்கு முத்தமிடும் நிகழ்வுகளால் பீடுநடை போடுகின்ற செம்மாந்த அமைப்பான எழுத்தாளர் மன்றமதன் வெள்ளிவிழா ஆண்டினிலே மலரொன்று வெளியிட்டுக் காலத்தின் பக்கங்களில் மகுடமிடக் காத்திருக்கும் நம் தமிழின் சிறப்பிற்கு மாலை சூடிக் கொண்டாட அன்போடு அழைக்கின்றோம்.

நம் தமிழின் உயர்விற்கு உரமிடுவோம் !

வாடாத பயிராக வளர்த்தெடுப்போம். !!



# 8 பதிற்றுப்பத்தா? தமிழர் சொத்தா?

**முனைவர் செ.மார்கண்டன்**
இணைப் பேராசிரியர், வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை.

## முன்னுரை :

பதிற்றுப்பத்து எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். இது சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றி பத்துப் புலவர்கள் பத்துப் பத்தாகப் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் என்னும் பெயரில் ஒரு பாடல் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நூலில் முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. ஏனைய எட்டுப் பத்துகளும் கிடைத்துள்ளன. இந்த எண்பது பாடல்கள், இரண்டு சேரர் மரபைச் சேர்ந்த எட்டுச் சேர மன்னர்களின் வரலாற்றை எடுத்துரைக்கின்றன.

உதியஞ்சேரல் வழித் தோன்றல்களான ஐந்து சேர மன்னர்களும் அந்துவஞ்சேரல் இரும்பொறை வழித் தோன்றல்களான மூன்று சேர மன்னர்களும் ஆக மொத்தம் எட்டுப் பேர் பற்றிய வரலாறு நமக்கு பதிற்றுப்பத்தின் 80 பாடல்கள் வாயிலாக கிடைக்கப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு அரசன் மீதும் பாடப்பட்ட பத்துப் பாடல்களில் உள்ள செய்திகளைத் தொகுத்து அந்தப் பத்தின் இறுதியில் உள்ள பதிகத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்நூல் சேரரின் வரலாற்றை முழுமையாக எடுத்துரைப்பதால் இரும்புக் கடல் என்று அழைக்கப்படும் பதிற்றுப்பத்து, தமிழரின் மிக முக்கிய சொத்தாக கருதப்படுவது திண்ணம் என்பதை இக்கட்டுரை முன்னெடுக்கிறது.

## பதிற்றுப்பத்து கல்வெட்டுப் பதிவுகள் :

பதிற்றுப்பத்து நூலின் உரையில் கல்வெட்டுச் சான்று நிரம்பிக் கிடக்கிறது. எட்டுத்தொகை நூலான பதிற்றுப்பத்து என்னும் புறநூல் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. பதிற்றுப்பத்து உரைகளில் உள்ள கல்வெட்டுச் சான்றுகள் ஆராயப்படுகின்றன. உரை எழுதத் தொடங்கும் உரையாசிரியர் உரையின் முடிவில் எடுத்தாண்ட நூல் விவரங்களை முன்வைத்துள்ளார். அதேபோன்று அவர் பயன்படுத்திய கல்வெட்டுத் தரவுகளையும் பதிவுச் செய்துள்ளார். உரை பயில்வோருக்கு எளிதில் விளங்கும் வண்ணம் சேர நாட்டின் வரைப்படத்தையும் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய பல்வகைப் புரிதல்களை வாசகனுக்கு ஏற்படுத்தும் உத்திகள் போற்றுதலுக்குரியதாகும். தெ.பொ.மீ., வெள்ளை வாரணனார், சதாசிவ பண்டாரத்தார் போன்றோரின் ஆராய்ச்சி உரைகளும், ஔவை துரைசாமிப் பிள்ளையின் உரைச் சிறப்பை எடுத்தியம்புகின்றன.



## ல்வெட்டு உணர்த்தும் காலம் :

பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தைப் பாடியவர் குமட்டூர் கண்ணன் ஆவார். இரண்டாம் பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடியுள்ளது. இப்பொழுது குமட்டூர் கண்ணனும், நெடுஞ்சேரலாதனும் சமகாலத்தவரா என்ற வினாவை முன்வைத்து விவாதிக்கத் தொடங்குவோம்.

தமிழியல் இலக்கியச் சூழலில் பாடல்களைத் தொடங்கும் முன்பாகப் பதிகம் பாடும் மரபு இருந்துள்ளது. இரண்டாம் பத்தின் பதிகத்தின் (வெள்ளை வாரணர் தரும் விளக்கம்) அடிப்படையில் பார்த்தா… குமட்டூர் கண்ணனும், நெடுஞ் சேரலாதனும் சமகால… வர் என்று பதிவுசெய்துள்ளது அப்பதிகம். பதிகக் கூற்… "பாடிப் பெற்ற பரிசில் உம்பற்காட்டு ஐஞ்ஞூறூர் பிரமதேயம… கொடுத்து முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டுள் வருவத… பாகம் கொடுத்தான் அக்கோ. இமையவரம்பன் நெடு… சேரலாதன் ஐம்பத்தெட்டி யாண்டு வீற்றிருந்தான்" (ஔவை… சு.துரைசாமிப்பிள்ளை; 2007; ப.4). இக்கூற்று இருவ… சமகாலத்தவர் என்பதைப் புலப்படுத்துகிறது. இவ்… ளுக்கு விளக்கம் எழுதும் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை… தாசிவ பண்டாரத்தாரின் பதிக விளக்கத்தை முன்வை… ளார்.

பதிகங்கள் ஆராய்ச்… ரியது என்று ந.மு.வேங்கடசாமி நாட்டார் கூறியதால், ஔ… வை சு.துரைசாமிப் பிள்ளை பதிற்றுப்பத்துப் பதிகத்திற்கு உரை எழுதவில்லை.

இமயவரம்பனைப் பாடி உம்பற்காடு என்ற பகுதியில் ஐந்நூறு ஊர்களைப் பிரமதேயமாகவும், அவனது தென்னாட்டு வருவாயுள் பாகமும் பெற்றாரென இரண்டாம் பத்தின் பதிகம் கூறுகிறது என்று பதிவு செய்துள்ளது நோக்கத்தக்கது. இத்தகவலைக் கொண்டு இருவரும் சமகாலத்தவர் என்பது தெளிவாகிறது. இத்தகவலின் அடிப்படையில் இருவரும் சமகாலத்தவர் என்று ஏற்றுக் கொண்டாலும் இன்னும் சில சிக்கல்கள் எழுவதைத் தவிர்க்க முடிவதில்லை.

## முடிவுரை :

சங்கப் பனுவல்கள் எழுதப்பட்ட காலம் வேறாகவும், அதைத் தொகுத்து உரை எழுதப்பட்ட காலம் வேறாகவும் இருக்கிறது. இத்தகைய வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள பதிகங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. தமிழர் மரபில் தொன்மை வாய்ந்தவர்களாக சேரர்களை அடையாளம் காணலாம். சேரர்களின் வரலாறு என்பது பதிற்றுப்பத்தின் வழியே பரவலாக்கம் செய்யப்படுவது உறுதியாகிறது. எனவே, தமிழர்களின் வரலாற்றைத் தெளிவுபடுத்தும் பதிற்றுப்பத்து தமிழர்களின் சொத்தாகும் என்பதே இக்கட்டுரையின் முடிவாக அமைகிறது.